Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

# ஹலோ மிரர் மெட்ராஸ்

hellomadrasdaily@gmail.com R.DIS No: 60/2021 தினசரி காலை நாளிதழ்

உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | வெள்ளிக்கிழமை, ஜூலை 30, 2021 | 4 பக்கங்கள் | ரூ.2/- | இதழ் 16

## தூத்துக்குடி மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் போடப்பட்டுவரும் தார் சாலைகளை மாநகராட்சி ஆணையர் சாருஸ்ரீ நேரில் ஆய்வு செய்தார்



தூத்துக்குடி, ஜூலை 30, 2021: தூத்துக்குடி மாநகராட்சியின் மேற்கு மண்டலத்திற்குட்பட்ட பாளையங்கோட்டைரோட்டின் எம்ஜிஆர் பூங்காவிற்கு பின்புறம் போடப்பட்டு வரும் தார் சாலைகளை மாநகராட்சி ஆணையர் சாருஸ்ரீ ஐஏஎஸ். நேரில் சென்று தார் சாலைகள் தரமானதாக ஒப்பந்தக்காரர்களால் போடப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்தார்

தூத்துக்குடி மாநகராட்சி ஆணையராக தற்போது புதிதாக பதவியேற்றுள்ள சாருஸ்ரீ ஐஏஎஸ்.மாநகராட்சி சார்பில் நடைபெறும் புதிய தார்சாலை அமைக்கும் பணிகளை நேரில் சென்று ஆய்வு செய்து வருவதன் காரணமாக தற்போது ஒப்பந்ததாரர்கள் மத்தியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது ஏற்கனவே கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பு ஸ்வரன் சிங் என்ற மாவட்ட ஆட்சித்தலைவர் தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்தபோது நகராட்சியாக இருந்த தற்போதைய மாநகராட்சியாகியுள்ள பகுதிகளில் அப்போது புதிதாக போடப்படக்கூடிய சாலைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் என்ற முறையில் அவரே நேரில் சென்று இரும்பு கம்பிகளை வைத்து சாலைகளின் தரத்தை ஆய்வு செய்து சிறப்பான கலெக்டர் என்று அந்த காலகட்டத்தில் மக்கள் மத்தியில் சிறப்பான பெயர் பெற்றார் அதே வழியை பின்பற்றி தற்போதைய தூத்துக்குடி மாநகராட்சி ஆணையராக பொறுப்பேற்றுள்ள சாருஸ்ரீ ஐஏஎஸ் செயல்பட்டு வருவதன் காரணமாக தற்போது தூத்துக்குடி மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் தார் சாலைகள் போடும் பணிகளை ஒப்பந்தம் எடுக்கும் ஒப்பந்தக்காரரர்கள் தாங்கள் போடும் தார்சாலைகளை தரமானதாக போட வேண்டும் என்ற எண்ணத்தில் இருப்பதாகவும் அதிகாரிகள் மத்தியில் கூறப்படுகிறது நிகழ்ச்சியில் மாநகராட்சி பொறியாளர் சேர்மக்கனி. மேற்கு மண்டல மாநகராட்சி துணை ஆணையர் சேகர். பொறியாளர்கள் சரவணன். பிரின்ஸ். துரைமணி. உட்பட ஏராளமானவர்கள் நிகழ்ச்சியின்போது உடன் சென்றனர்.

## பத்தாண்டு காலமாக தமிழகத்தில் எல்லா துறைகளிலும் ஊழல் செய்த அதிமுகவினர் அதை மறைக்க தற்போது போராட்டம் நடத்துகின்றனர் அமைச்சர் செஞ்சி மஸ்தான்

செஞ்சி, ஜூலை 30 2021: விவசாயிகள் கூட்டுறவு வங்கியில் கடன் கேட்கும் பொழுது கடன் கொடுக்க லஞ்சம் கேட்டால் சங்கத் தலைவர் பணியாளர்கள்சிறைச்சாலைக்கு அனுப்பப்படுவார்கள் என அமைச்சர் செஞ்சி மஸ்தான் எச்சரிக்கை விடுத்தார்.

விழுப்புரம் வடக்கு மாவட்டம் வல்லம் வடக்கு ஒன்றியம் திமுக சார்பில்அதிமுக மக்கள் நீதி மய்யம் தேமுதிக பாமக அமமுக உள்ளிட்ட மாற்று கட்சியினர் 500 க்கும் மேற்பட்டோர்வல்லம் வடக்கு ஒன்றிய செயலாளர் அண்ணாதுரை ஏற்பாட்டில் திமுகவில் இணைந்தனர்.

மக்கள் நீதி மய்யம் கட்சியின் வல்லம் ஒன்றிய செயலாளர் ஞானமூர்த்தி தலைமையில் தேமுதிக மாவட்ட பிரதிநிதி குமரவேல் இளைஞரணி செயலாளர் சங்கர்இணை செயலாளர் தொண்டூர் கிருஷ்ணன் அதிமுக இல்லோடு மணிவண்ணன்பாமக கீழ்தாங்கல் அருணகிரி பென்னகர் விஜயகுமார் ஏதா நிமிலி சேகர்உள்ளிட்ட மாற்று கட்சியினர் 500 க்கும் மேற்பட்டோர் அக்கட்சியிலிருந்து விலகி செஞ்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் முன்னிலையில் திமுகவில் இணைந்தனர்.



திமுகவில் இணைந்த அனைத்து நிர்வாகிகளுக்கும் அமைச்சர் செஞ்சி மஸ்தான் சால்வை அணிவித்து வரவேற்று வாழ்த்து தெரிவித்தார்.

அப்போது அமைச்சர் செஞ்சி மஸ்தான் பேசுகையில்:

முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் செயல்பாடுகளை பார்த்து தமிழகம் முழுவதிலும் இருந்து ஆயிரக்கணக்கான மாற்று கட்சியினர் திமுகவில் இணைந்து வருகின்றனர்.

இந்தியாவிலேயே கொரோனா கால நிவாரணமாக தமிழகத்தில் உள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு 4,000 ரூபாயும் 14 வகை மல்லிகை தொகுப்பினை வழங்கியவர் தமிழக முதல்வர் மு க ஸ்டாலின், கலைஞரின் வழிகாட்டுதலோடு மக்கள் முதல்வர் முக ஸ்டாலின் மக்களுக்காக நடத்துகின்ற அரசு என பெருமையோடும்சொல்லுகின்ற வகையிலும்

வெளிப்படைத் தன்மையோடு ஆட்சி நடத்துகின்ற திமுக அரசில் ஏழைகளுக்கு வேலைவாய்ப்புஎந்தவித செலவு இல்லாமல்கிடைக்கும் என அமைச்சர் செஞ்சி மஸ்தான் உறுதிபட தெரிவித்தார்.

பத்தாண்டு காலமாக தமிழகத்தில் எல்லா துறைகளிலும் ஊழல் செய்த அதிமுகவினர் அதை மறைக்க போராட்டம் நடத்துகின்றனர்.

விவசாயிகள் கூட்டுறவு வங்கியில் கடன் கேட்கும்போது கடன் கொடுக்க லஞ்சம் கேட்டால் ஜெயலலிதா சசிகலா எப்படி ஜெயிலுக்கு சென்றார்களோ அதேபோல் கூட்டுறவு சங்கத் தலைவர்கள் லஞ்சம் வாங்கியது உறுதிசெய்யப்பட்டால் அவர்கள் உடனடியாக சிறைச் சாலைக்கு அனுப்புவோம் என்பதனை போராடுகின்ற அதிமுகவிற்கு எச்சரிக்கை விடுத்தார்.

அதிமுக ஆட்சியில் கட்டப்பட்ட தென்பெண்ணை ஆற்றில் கட்டிய தடுப்பணை 30 நாளில் அடித்து சென்றது.

வெளிப்படையான தன்மை யான ஆட்சியை திராவிட முன்னேற்றக் கழகம் கொடுத்துக் கொண்டு உள்ளது இதை பொறுத்துக்கொள்ள முடியாத அதிமுகவினர் போராட்டம் என்ற போர்வையில் கரைந்து கொண்டு உள்ளனர்.

இன்று வன்னியர்களுக்கு இட ஒதுக்கீடு அளித்து முதல்வர் உத்தரவிட்டுள்ளதைவரவேற்று பாமக நிறுவனர் டாக்டர் ராமதாஸ் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

திராவிட முன்னேற்ற இயக்கம் அடித்தட்டு மக்களுக்கு மதிப்பளித்து அவர்களுக்கு உண்மையாக உழைக்கின்ற இயக்கமாக செயல்பட்டு வருகிறது என இவ்வாறு அமைச்சர் பேசினார்.

## 5 மாநில தலைமை தேர்தல் அதிகாரிகளுடன் தேர்தல் ஆணையம் ஆய்வு கூட்டம் நடத்தியது

புதுதில்லி, ஜூலை 30, 2021: அடுத்து நடைபெறவுள்ள 5 மாநில தேர்தல்கள் தொடர்பான திட்டமிடலுக்காக இந்திய தேர்தல் ஆணையம் இன்று டெல்லியில் உள்ள அதன் தலைமை அலுவலகமான நிர்வச்சன் சதனில் கோவா, மணிப்பூர், பஞ்சாப், உத்தரகாண்ட் மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகிய மாநில தலைமை தேர்தல் அதிகாரிகளுடன் ஆய்வுக் கூட்டம் நடத்தியது. இதில் உரையாற்றிய தலைமை தேர்தல் ஆணையர் திரு.சுஷில் சந்திரா, வெளிப்படைத்தன்மை மற்றும் சார்பின்மை ஆகியவை தேர்தல் நடத்துவதற்கு முக்கிய அடையாளங்கள் என்றார். ஒவ்வொரு மாநிலத்திலும் வெவ்வேறு விதமான பிரச்சினைகள் இருந்தாலும் மக்களை முன்னிலைப்படுத்தி முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்றும், அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கிய முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார். தனது உரையின் போது வாக்காளர் பட்டியல் சரியாக இருப்பதன் முக்கியத்துவதை வலியுறுத்திய அவர்,

அனைத்து மாநில தலைமை தேர்தல் அதிகாரிகளும் நிலுவையில் உள்ள வாக்காளப் பட்டியலில் திருத்தம் தொடர்பான விண்ணப்பங்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். மேலும் அவர், கொரோனா தொற்று சூழலில் வாக்குச்சாவடிகளின் எண்ணிக்கைகளை மாற்றியமைப்பது குறித்து பரிசீலனை செய்ய வேண்டும் என்றும், அனைத்து வாக்குச் சாவடிகளிலும் அத்தியாவசிய வசதிகள் இருக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். இந்த ஆய்வுக் கூட்டத்தில் பங்கேற்ற 5 மாநில தலைமை தேர்தல் அதிகாரிகளும் வாக்காளர்களின் வயது விபரம், நிதி கையிருப்பு, மனித வளம், திட்டமிடல், வாக்குச்சாவடி ஏற்பாடுகள், தகவல் தொழில்நுட்ப சாதனங்கள், வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவது உள்ளிட்ட தங்களது மாநிலத்தில் தேர்தல் நடத்துவது பற்றிய பல்வேறு அம்சங்கள் குறித்து விரிவாக படக்காட்சிகளுடன் விளக்கம் அளித்தனர். இந்த கூட்டத்தில், மூத்த துணை தேர்தல் ஆணையர், துணை தேர்தல் ஆணையர்கள் மற்றும் தேர்தல் ஆணைய மூத்த அதிகாரிகள் கலந்துக்கொண்டனர்.



மதுரை: மதுரை மாவட்டம் கிழக்கு ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட இளமனூர் கிராமத்தில் உலக வங்கி திட்டத்தின் கீழ் பொதுப்பணித்துறை சார்பில் மடை மராமத்து பணி துரிதமாக நடைபெற்றபோது எடுத்த படம். இதன்மூலம் 145 ஏக்கர் விளைநிலங்கள் பாசன வசதி பெறும் என்பது குறிப்பிடதக்கது.

## பயங்கரவாதம் சர்வதேச அமைதிக்கும் பாதுகாப்புக்கும் மிகப் பெரிய அச்சுறுத்தலாக அமைந்துள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்

புதுதில்லி, ஜூலை 30, 2021: ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு சார்பில் தஜிகிஸ்தான் நாட்டின் துஷான்பே நகரில் நடைபெற்ற பாதுகாப்பு அமைச்சர்கள் மாநாட்டில் கலந்துக்கொண்டு உரையாற்றிய மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு.ராஜ்நாத் சிங், "சர்வதேச அமைதிக்கும் பாதுகாப்புக்கும் பயங்கரவாதம் மிகப் பெரிய அச்சுறுத்தலாக உள்ளது" என்றார். எந்த விதமான பயங்கரவாத நடவடிக்கைகள் அல்லது அது போன்றவற்றுக்கு துணை போகும் நடவடிக்கைகள், எல்லை தாண்டிய பயங்கரவாதம், யாரால், எவ்வித காரணங்களில், எந்தக் காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்டாலும் அது மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றம் என அவர் குறிப்பிட்டார். எத்தகைய வடிவத்திலும் இருக்கும் பயங்கரவாத நடவடிக்கைகளை இந்தியா எதிர்த்து போரிடும் என்பதை அமைச்சர் திரு.ராஜ்நாத் சிங் மீண்டும் ஒரு முறை உறுதிப்படத் தெரிவித்தார்.

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்புடன், பாதுகாப்பு சார்ந்த நடவடிக்கைகளில் அமைப்பு நாடுகளுடன் நம்பிக்கையை வலுப்படுத்துவதிலும், உறுப்பு நாடுகளுடன் சமத்துவம், பரஸ்பர மரியாதை மற்றும் புரிதலின் அடிப்படையில் உறவை பலப்படுத்துவதிலும் இந்தியா அதிக முக்கியத்துவம் செலுத்தி வருவதாக திரு.ராஜ்நாத் சிங் தெரிவித்தார். இதே உணர்வுடன் தான் இந்தியா பல ஆண்டுகளாக வன்முறை மற்றும் பேரழிவைச் சந்தித்து வரும் ஆப்கான் மக்களுக்கு உதவி வருவதை அவர் சுட்டிக்காட்டினார். மேலும், ஆப்கானிஸ்தானில் இதுவரை இந்தியா 500-க்கும் மேற்பட்ட திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளதாகவும், மேலும் சில திட்டங்களை செயல்படுத்தி வருவதாகவும், ஒட்டுமொத்தமாக 3 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான உதவிகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். இந்தியா, ஐரோப்பிய-ஆசிய நாடுகளுக்கு இடையே முக்கியமான சக்தியாக விளங்குவதையும், இந்தோ-பசிபிக் பகுதியில் முக்கிய நாடாக விளங்குவதையும் குறிப்பிட்ட அவர், இந்தப் பகுதிகளில் வளர்ச்சி மற்றும் வளம் செழிக்க இந்தியா கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவித்தார். இந்தியா, வரும் ஆகஸ்ட் மாதம் முதல் இந்தாண்டு இறுதிக்குள் 250 கோடி டோஸ் கொரோனா தடுப்பூசிகளை தயாரிக்க திட்டமிட்டுள்ளதாகவும், குறைந்தபட்சம் 90 கோடி இந்தியர்களுக்கு தடுப்பூசி செலுத்தவும், நட்பு நாடுகளுக்கு தடுப்பூசி வழங்கி உதவவும் உறுதிபூண்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சர் திரு.ராஜ்நாத் சிங் கூறினார். ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு சர்வதேச அளவில் முக்கியத்துவம் வாய்ந்த அமைப்பாக வளர்ச்சியடைந்துள்ளது மகிழ்ச்சி அளிப்பதாகக் கூறிய அவர், இன்று நடைபெறும் இந்நிகழ்ச்சி இப்பகுதியில் நிலைத்தன்மையையும், பாதுகாப்பையும் பலப்படுத்தும் என்று குறிப்பிட்டார்.

## ஜம்மு&காஷ்மீருக்கு மாநில அந்தஸ்தை மீண்டும் வழங்குவது குறித்து அமைச்சரின் பதில்

புதுதில்லி, ஜூலை 30, 2021 : நாடாளுமன்றத்தின் மாநிலங்களவையில் கேள்விகளுக்கு எழுத்துப்பூர்வமாக பதிலளித்த மத்திய உள்துறை இணை அமைச்சர் திரு நித்யானந்த் ராய் கீழ்காணும் தகவல்களை அளித்தார். ஜம்மு&காஷ்மீரில் நிலைமை சீரடைந்தவுடன் சரியான நேரத்தில் மாநில அந்தஸ்து வழங்கப்படும். அரசமைப்பு மாற்றங்கள் மற்றும் ஜம்மு&காஷ்மீர் மாநிலத்தை ஜம்மு&காஷ்மீர் மற்றும் லடாக் ஆகிய இரண்டு யூனியன் பிரதேசங்களாக பிரித்ததை தொடர்ந்து, தேச பாதுகாப்பு மற்றும் ஜம்மு&காஷ்மீர் பாதுகாப்பு ஆகியவற்றை கருத்தில் கொண்டு, இணையம் மற்றும் கைபேசி சேவைகள் போன்ற தொலைதொடர்பு வசதிகளுக்கு தற்காலிக கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. அவ்வப்போது நிலைமை ஆய்வு செய்யப்பட்டு, கட்டுப்பாடுகள் படிப்படியாக தளர்த்தப்பட்டு, 2021 பிப்ரவரி 5 முதல் ஒட்டுமொத்த ஜம்மு&காஷ்மீர் யூனியன் பிரதேசத்திற்கும் 4ஜி இணைய சேவைகள் மீண்டும் வழங்கப்பட்டன. தீவிரவாத சம்பவங்களை பொருத்த வரை, 2019 உடன் ஒப்பிடும் போது 2020-ல் 59 சதவீதமும், 2020 ஜூன் வரையிலான சம்பவங்களுடன் ஒப்பிடும் போது 2021 ஜூன் வரை 32 சதவீதமும் குறைந்துள்ளன. வர்த்தக நிறுவனங்கள், பொது போக்குவரத்து, அரசு அலுவலகங்கள், கல்வி நிலையங்கள், மருத்துவமனைகள் உள்ளிட்டவை ஜம்மு&காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் வழக்கம் போல் இயங்கி வருகின்றன. பயங்கரவாதத்தை முற்றிலும் பொறுத்துக்கொள்ளாத கொள்கையை பின்பற்றி வரும் அரசு, தீவிரவாதத்தை கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. சட்டத்திற்கு புறம்பான வகையில் இடம்பெயர்வோர் (ரோஹிங்கியாக்கள் உள்ளிட்ட) தேச பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளனர். ரோஹிங்கியாக்கள் தொடர்புடைய சட்டவிரோத நடவடிக்கைகள் குறித்த தகவல்கள் உள்ளன. சட்டத்திற்கு புறம்பான வகையில் இடம்பெயர்வோரை கைது செய்து, அவர்களது சொந்த நாடுகளுக்கே திரும்ப அனுப்புவதற்கன நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போதைய சட்டம் ஒழுங்கு நிலைமைக்கு ஏற்ற வகையில் குற்றச் சட்டங்களை மாற்றி அமைப்பதற்கும், சமுதாயத்தின் பாதிக்கப்படக்கூடிய பிரிவினருக்கு விரைவான நீதி கிடைக்க செய்வதற்கும், ஏற்கனவே உள்ள குற்றச் சட்டங்களை ஆய்வு செய்வதற்கான பணியை அரசு தொடங்கியுள்ளது. மக்கள் சார்ந்த, உயிர் பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் அளிக்கும் மற்றும் மனித உரிமைகளை பாதுகாக்கும் சட்டப்பூர்வ அமைப்பை உருவாக்க இந்திய அரசு திட்டமிட்டுள்ளது. இந்திய அரசமைப்பின் படி சட்டம் ஒழுங்கு மாநிலங்களின் கட்டுப்பாட்டில் வரும் போதிலும், சட்டம் ஒழுங்கை உறுதி செய்வதற்காகவும், எந்த ஒரு தனி நபரும் சட்டத்தை கையில் எடுப்பதை தடுப்பதற்காகவும், மத்திய உள்துறை அமைச்சகம் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு அவ்வப்போது அறிவுறுத்தல்களை வழங்கி வருகிறது. வெறுப்பு குற்றங்கள் மற்றும் கும்பல் தாக்குதல்களை தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. குஜராத், மகாராஷ்டிரா, கோவா, கர்நாடகா, கேரளா ஆகிய ஐந்து மாநிலங்கள் மற்றும் தாத்ரா மற்றும் நாகர் ஹவேலி மற்றும் டாமன் மற்றும் டையு யூனியன் பிரதேசத்தை டவுக்டே புயல் தாக்கியது. பேரிடர் மேலாண்மை என்பது மாநில அரசுகளின் பொறுப்பு என்கிற போதிலும், பாதிக்கப்பட்ட மாநிலங்களுக்கு உதவுவதற்காக மாநில பேரிடர் நிவாரண நிதி மற்றும் தேசிய பேரிடர் நிவாரண நிதியில் இருந்து நிதி உதவி வழங்கப்பட்டு வருகின்றன. டவுக்டே மற்றும் யாஸ் புயல்களுக்கு பிறகு, கூடுதல் நிதி உதவியாக குஜராத்திற்கு ரூ 1000 கோடியும், ஒடிசாவுக்கு ரூ 500 கோடியும், மேற்கு வங்கத்திற்கு ரூ 33 கோடியும், ஜார்கண்டிற்கு ரூ 200 கோடியும் தேசிய பேரிடர் நிவாரண நிதியில் இருந்து வழங்கப்பட்டுள்ளது. இதைத் தவிர, பாதிக்கப்பட்ட மாநிலங்கள் உள்ளிட்ட அனைத்து மாநிலங்களுக்கும் 2021 ஏப்ரல் 29 அன்று மாநில பேரிடர் நிவாரண நிதியில் இருந்து முதல் தவணையாக ரூ 8873.60 கோடி வழங்கப்பட்டது.



மதுரை: மதுரை மாவட்டம் கிழக்கு ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட இளமனூர் ஊராட்சியில் மதுரை சிவகங்கை ரோடு முதல் பொட்டப் பனையூர் வரை சாலை ஓரங்களில் மரக்கன்றுகள் நடுவதற்கான திட்டத்தை மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அனிஷ்சேகர் தலைமையில்வணிகவரி மற்றும் பத்திரப் பதிவுத் துறை அமைச்சர் மூர்த்தி மரக்கன்று நட்டு வைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சித் துறை செயற்பொறியாளர் இந்துமதி,கிழக்கு ஊராட்சி ஒன்றிய மாவட்ட சேர்மன் சூரியகலா கலாநிதிஒன்றிய சேர்மன் மணிமேகலை ஒன்றிய செயலாளர் கெங்கா,இளமனூர் செயலாளர் மதன் மோகன்,உதவி பொறியாளர்கள் விக்னேஷ் சுகன்யா இளமனூர் ஊராட்சி மன்ற தலைவர் ராக்கப்பன்ஒத்தக்கடை ஊராட்சி மன்ற தலைவர் சரவணன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# எஃகு தொழிலில் வர்த்தகம் செய்வதை எளிதாக்குதல் எளிதாக்குவதற்காக உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன

புதுதில்லி, ஜூலை 30, 2021 : நாடாளுமன்றத்தின் மாநிலங்களவையில் எழுத்துப்பூர்வமாக பதிலளித்த மத்திய எஃகு அமைச்சர் ராம் சந்திர பிரசாத் சிங் கீழ்காணும் தகவல்களை அளித்தார். கட்டுப்பாடுகள் நீக்கப்பட்ட துறையான எஃகு தொழிலில் அமைச்சகத்தின் பணி வசதிகளை வழங்குவதே ஆகும். எஃகு தொழிலில் வர்த்தகம் செய்வதை எளிதாக்குவதற்காக கீழ்கண்டவை உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. 1. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட இரும்பு மற்றும் எஃகு பொருட்களுக்கு முன்னுரிமை அளிப்பதற்காக 2017 மே 8 அன்று அறிவிக்கப்பட்ட கொள்கை, 2019 மே 29 மற்றும் 2020 டிசம்பர் 31 அன்று திருத்தப்பட்டது.

2. சிறப்பு எஃகு உற்பத்தியை நாட்டில் பெருக்குவதற்காக உற்பத்தி சார்ந்த ஊக்கத்தொகை திட்டத்தில் சிறப்பு எஃகு சேர்ப்பு. 3. குறைந்த அளவில் பயன்பாடு, மறு பயன்பாடு, மறுசுழற்சி, மீட்சி, மறு வடிவமைப்பு மற்றும் மறு உற்பத்தி ஆகிய ஆறு கொள்கைகளை ஊக்குவிப்பதற்காக, இரும்பு கழிவுகளை ஒழுங்குமுறை படுத்தப்பட்ட மற்றும் அறிவியல் பூர்வமான முறையில் மறுசுழற்சி செய்வதற்காக நாடு முழுவதும் மையங்களை அமைப்பதற்கான சுற்றுச்சூழலுக்கு உகந்த நிர்வாக அமைப்பை உருவாக்குவதை எஃகு கழிவு மறுசுழற்சி கொள்கை 2019 நோக்கமாகக் கொண்டுள்ளது. 4. 2019 செப்டம்பர் 5 அன்று அறிவிக்கப்பட்ட எஃகு இறக்குமதிகள் குறித்து முன்கூட்டியே பதிவு செய்வதற்கான ஆன்லைன் தளமான எஃகு இறக்குமதி கண்காணிப்பு அமைப்பு, உள்நாட்டு உற்பத்தியை திட்டமிட தொழில்துறைக்கு உதவுகிறது. எஃகு துறையில் முதலீடுகளை ஈர்த்து, தேவையான வசதிகளை வழங்குவதற்காக எஃகு அமைச்சகத்தில் திட்ட மேம்பாட்டு மையம் அமைக்கப்பட்டுள்ளது.

# கனிம வளங்களின் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் முயற்சிகள்

புதுதில்லி, ஜூலை 30, 2021: மத்திய சுரங்கங்கள், நிலக்கரி மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் திரு பிரகலாத் ஜோஷி, மக்களவையில் இன்று கீழ் காணும் தகவல்களைத் தெரிவித்தார்: நாட்டின் கனிம வளங்களை ஊக்குவித்து, பாதுகாப்பதற்காக, சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) சட்டம், 1957 (எம்எம்டிஆர் சட்டம், 1957), அவ்வப்போது திருத்தி அமைக்கப்பட்டு வருகிறது. கனிம உற்பத்தியை அதிகரிக்கவும், நாட்டில் எளிதான வர்த்தகத்தை மேற்கொள்ளவும், கனிம உற்பத்திக்கு ஊக்கமளிக்கவும், எம்எம்டிஆர் திருத்தப்பட்ட சட்டம், 2021-இன் வாயிலாக, எம்எம்டிஆர் சட்டம், 1957, அண்மையில் திருத்தி அமைக்கப்பட்டது. இதன்படி, ஆராய்ச்சிப் பணிகள் எளிமையாக்கப்பட்டுள்ளன. கனிமங்களின் பாதுகாப்பு மற்றும் அமைப்பு முறை சார்ந்த மேம்பாட்டிற்காகவும், சுரங்க நடவடிக்கைகளால் ஏற்படும் மாசால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதைத் தடுப்பதற்காகவும் கனிம பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டு விதிகள், 2017 வடிவமைக்கப்பட்டது. இதன்படி, கனிமங்களின் பாதுகாப்பு அமைப்புமுறை மற்றும் அறிவியல் ரீதியான சுரங்கப் பணிகள் மற்றும் சிறிய கனிமங்கள், நிலக்கரி மற்றும் அணு நிலை கனிமங்கள் தவிர்த்த கனிமங்களின் பகுதிகளில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு உள்ளிட்டவை குறித்து சுரங்கங்களில் இந்திய சுரங்க அமைப்பு தொடர்ந்து ஆய்வுகளை மேற்கொள்ளும். திருத்தியமைக்கப்பட்ட எம்எம்டிஆர் சட்டம், 2021-இன்படி, கனிம ஆராய்ச்சி அறக்கட்டளை, லாப நோக்கில்லாத தன்னாட்சி அமைப்பாக செயல்படும். கேந்திர ரீதியான மற்றும் முக்கிய கனிமங்களுக்கு முன்னுரிமை அளித்து நிலக்கரி மற்றும் நிலக்கரி அல்லாத கனிமங்களின் விரிவான ஆராய்ச்சியை மேற்கொள்வது; ஆழமாக இருக்கும் அல்லது மறைந்திருக்கும் கனிம வளங்களை கண்டறிந்து, சுத்திகரித்து, ஆய்வு செய்வதற்கான சிறப்பு ஆராய்ச்சிகள் மற்றும் திட்டங்களுக்கு நிதி உதவி அளிப்பது; புவி இயற்பியல், தரை மற்றும் வான்வழி ஆய்வு மற்றும் புவியியல் சார்ந்த சாத்தியக்கூறுகள் உள்ள பகுதிகள் மற்றும் இந்தியாவின் இதர பகுதிகளில் புவி வேதியியல் ஆய்வுகளை மேற்கொள்வது; ஆராய்ச்சிப் பணிகளில் ஈடுபடுவோரது தொழில்நுட்பத் திறனை அதிகரிப்பதற்காக திறன் மேம்பாட்டு திட்டங்களை நடத்துவது; இந்தியாவின் கனிம வளங்களின் பாதுகாப்பு, மேம்பாடு மற்றும் ஆராய்ச்சிப் பணிகளுக்காக திரட்டப்பட்ட நிதியை பயன்படுத்துவதை இந்த அறக்கட்டளை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.



திருவள்ளூர்: அ.இ.அ.தி.மு.க ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் அ.இ.அ.தி.மு.க இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் ஆகியோரின் ஆணைப்படி திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருத்தணி ஒன்றிய கழக செயலாளர் கி. இரவி அவர்களின் தலைமையில் தாடூர் ஊராட்சி கண்டிகை கிராமத்தில் விடியல் தருவதாக வாக்குறுதி அளித்த திமுக அரசு அதை நிறைவேற்றாதை கண்டித்து போராட்டம்.

# பனப்பாக்கம் அரசு பள்ளியில் கற்றல் அடைவு மதிப்பீடு முகாம்

விக்கிரவாண்டி, ஜூலை 30.2021: விக்கிரவாண்டி அடுத்த பனப்பாக்கம் அரசு பள்ளியில் வயது வந்தோர்களுக்கு கற்றல் அடைவு மதிப்பீட்டு முகாம் நடந்தது.



விக்கிரவாண்டி ஒன்றியம் பனப்பாக்கம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் ,விழுப்புரம் கல்வி மாவட்டம் , பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி இயக்கம் , கற்போம் எழுதுவோம் இயக்கத்தின் கீழ் பயின்று வருபவர்களுக்கு குறைந்த பட்ச கற்றல் அடைவு மதிப்பீட்டு முகாம் நடந்தது.

முகாமினை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மதிவாணன், மாவட்ட சுற்றுசூழல் ஒருங்கிணைப்பாளர் சரவணன் ஆகியோர் பார்வையிட்டு மதிப்பீடு செய்தனர்.

வள மைய மேற்பார்வையாளர் காசிநாதன், ஆசிரியர் பயிற்றுனர் மாணிக்கராஜா, தலைமை ஆசிரியை ஜெயந்தி , ஜே.ஆர்.சி., மாவட்ட இணை கன்வீனர் தமிழழகன் , ஆசிரியர்கள் லட்சுமி நாராயணன்,விஜயலட்சுமி, பள்ளிமேலாண்மை குழு உறுப்பினர் குணவதி, தன்னார்வலர் சங்கவி ஆகியோர் கலந்து கொண்டனர் . விக்கிரவாண்டி அடுத்த பனப்பாக்கம் அரசு பள்ளியில் நடந்த முகாமினை ஒங்கிணைப்பாளர்கள் மதிவாணன், சரவணன் ஆகியோர் பார்வையிட்டனர்.



மதுரை: மதுரை மாவட்டம் மதுரை கிழக்கு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மாங்குளம் கிராமத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்.



மதுரை: மதுரை மாவட்டம் செல்லம்பட்டி ஒன்றியம் அருயப்பட்டி ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் மரக்கன்றுகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அனிஷ்சேகர் நடவு செய்தார்.

# திருப்பூரில் அதிமுகவினர் ஆர்ப்பாட்டம்



**திருப்பூர்: தேர்தலின் போது கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாத திமுக அரசை கண்டித்து உரிமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் திருப்பூர் புறநகர் மேற்கு மாவட்ட எம்ஜிஆர் இளைஞர் அணி பொருளாளர் கேசி மயில்சாமி அவர்கள் தலைமை தாங்கினார் . ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்கள் கணபதி பாளையம் ஊராட்சி கள்ளிமேடு கிளைக் கழக நிர்வாகிகள் சண்முகம். ஈஸ்வரன்.வையாபுரி மாரியப்பன்.சின்ராஜ்.நல்லசிவம் ராகவேந்திர பிரபு.ஜீவா.கமல் கனி முருகேசன்.சுப்பிரமணி.மாயவன் செல்வராஜ்.பாபு மற்றும் கழக நிர்வாகிகள் சமூக இறை வழியைப் பின்பற்றி கலந்து கொண்டனர்.**

# தே.மு.தி.க.,விலிருந்து விலகி தி.மு.க.வில் இணைந்தனர்

விக்கிரவாண்டி, ஜூலை 30, 2021: விக்கிரவாண்டி ஒன்றிய தே.மு.தி.க., விலிருந்து விலகி தொண்டர்கள் தி.மு.க.,வில் 100 பேர் கட்சியில் இணைந்தனர்.



விக்கிரவாண்டி ஒன்றியம் ஆர்.சி., மேலக்கொந்தையில் தே.மு.தி.க., ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சரவணன் தலைமையில் கட்சியினர் விலகி நேற்று தி.மு.க., மாவட்ட செயலாளர் , எம்.எல்.ஏ., புகழேந்தி முன்னிலையில் தி.மு.க., வில் 100 பேர் இணைந்தனர் . கட்சியில் இணைந்தவர்களுக்கு எம்.எல்.ஏ., சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார் . கிழக்கு ஒன்றிய செயலாளர் வேம்பி ரவி, மாவட்ட துணை அமைப்பாளர் பாபு ஜீவானந்தம் , முன்னாள் சேர்மன்

மலர்மன்னன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் வேல் முருகன், முன்னாள் கவுன்சிலர்கள் ராஜசேகர்,பாபுஜிபாண்டியன், இளைஞரணி கார்த்திக் ,கோபி, கிளை செயலாளர்கள் கருணாநிதி, முத்து உட்பட கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர் .

# சிவில் சர்வீஸ் ஆர்வலர்களுக்கான புதுமையான பட்டப்படிப்புத் திட்டம் பி.எஸ். அப்துர் ரஹ்மான் க்ரெசண்ட் இன்ஸ்டிட்யூட் ஆஃப் சைன்ஸ் அண்ட் டெக்னாலஜி கல்வி நிறுவனத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது

சென்னை, 30 ஜூலை 2021: பி எஸ். அப்துர் ரஹ்மான் க்ரெசண்ட் இன்ஸ்டிட்யூட் ஆஃப் சைன்ஸ் அண்ட் டெக்னாலஜி கல்வி நிறுவனம் இன்று பி.ஏ. பொது கொள்கை திட்டம் என்ற ஒரு புதிய கல்வித் திட்டத்தினை அறிமுகம் செய்து வைத்தது. பி.ஏ. பொது கொள்கை திட்டம் என்பது மாணவர்கள் தமது பட்டப்படிப்பினை பெறுவதோடு, அவர்கள் பட்டம் பெறும் நேரத்தில் சிவில் சர்வீஸஸ் சேவைகளுக்கும் தயாராவார்கள் என்ற நோக்கத்தில் அறிமுகப்படுத்தப்பட்டதாகும். பள்ளிப்படிப்பை முடித்த மாணவர்களுக்கு சட்டத்தை மதிக்கும் பணித்துறைஞராக வருவதற்கு உருவாகும் விதத்தில் ஒரு புதிய வழியை வழங்குகிறது.

பி.ஏ. பொது கொள்கை திட்டம், ஒரு பட்டப்படிப்பு மற்றும் சிவில் சர்வீசஸ் தேர்வுக்குத் தயாராகும் கூடுதல் நேரத்திற்கு இடையிலான இடைவெளியைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த முக்கியமான சந்தர்ப்பத்தில் பி.எஸ். அப்துர் ரஹ்மான் க்ரெசண்ட் இன்ஸ்டிட்யூட் ஆஃப் சைன்ஸ் அண்ட் டெக்னாலஜி நிறுவனத்திலிருந்து வருகை தந்திருந்த பிரமுகர்கள், துணைவேந்தர் டாக்டர் பிர் முகமது ; பதிவாளர் டாக்டர்.ஏ.அசாத்; கூடுதல் பதிவாளர் டாக்டர் ராஜா உசேன் மற்றும் முன்னாள் உதவி. கமாண்டன்ட் (சிஆர்பிஎஃப்) மற்றும் பொது கொள்கை திட்ட இயக்குநர், இளஞ்செழியன் ஆகியோர் ஆவர். அவர்களுடன் டாக்டர் சந்தோஷ்பாபு, ஐ.ஏ.எஸ். (ஓய்வுபெற்ற) (1995 தொகுதி) வி.காமராஜா, ஐ.பி.எஸ் (ஓய்வுபெற்ற) (1987 தொகுதி) மற்றும் சஷிகாந்த் செந்தில், ஐ.ஏ.எஸ் (ஓய்வுபெற்ற) (2009 தொகுதி) ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக வந்திருந்தனர்.

இந்த பட்டப்படிப்பினை கற்றல் குறித்துப் பேசிய டாக்டர் சந்தோஷ்பாபு, ஐ.ஏ.எஸ். அவர்கள், "ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியாக இருப்பது பல இளம் இந்தியர்களின் கனவாகும், இதை நீங்கள் எவ்வளவு விரைவாக செய்கிறீர்களோ, அவ்வளவு அதிக ஆண்டுகள் நீங்கள் நமது தேசத்தின் சேவையில் இருப்பீர்கள். பி.எஸ்.ஏ. கிரசன்டின் இந்த பி.ஏ. பொதுக் கொள்கை பட்டப்படிப்புத் திட்டமானது, யு.பி.எஸ்.சி.யின் கோரிக்கைகளுக்கு இணங்கும் வகையில் மிகவும் அழகாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்வதற்கு பி.ஏ.(பொதுக் கொள்கை) உங்களுக்கு ஒரு இயற்கையான தேர்வாகும். உங்களின் 22 வயதில் ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியாக வேண்டும் என்றொரு கனவு உங்களுக்கு இருந்தால், 12 ஆம் வகுப்பு முடிந்தவுடனே இந்தப் பட்டப்படிப்பினை படிப்பதற்கு ஆயத்தமாக வேண்டும்" என்று கூறினார்.



பி.ஏ. பொது கொள்கை திட்டம் பட்டப்படிப்பின் சில அம்சங்கள் மற்றும் நன்மைகள் பின்வருமாறு:

கூட்டாட்சி, மாநில மற்றும் உள்ளூர் அரசாங்கங்களில் சேவையில் உள்ள மற்றும் ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ் / ஐ.பி.எஸ் / ஐ.எஃப்.எஸ் அதிகாரிகள் மற்றும் அதிகாரிகளால் வழிகாட்டுதல் ஒரு அனுபவமிக்க அரசு ஊழியர் போன்ற தொரு கண்ணோட்டத்தை மாணவர்கள் பகிர்ந்து கொண்டு உணர்வதற்கு உதவுகிறது.

பாடத்திட்டத்தில் என்.சி.சி. யினை சேர்த்துள்ளதன் மூலமாக தேசபக்தி உணர்வினை விழித்தெழச் செய்வதுடன் மாணவர்களிடையே ஒழுக்கத்தை வளர்த்துக் கொள்வதற்கும் அதன் மூலம் அவர்களின் லட்சியங்களை அடையும் எண்ணத்தை மேலும் அதிகரிக்கவும் உதவுகிறது.

பி.ஏ. பொது கொள்கை திட்டம் ஒவ்வொரு அரசு ஊழியரின் தனிச்சிறப்பான கல்வி அறிவு மற்றும் பகுப்பாய்வு திறன்களைப் பெறும் வகையில் உருமாறும் வாய்ப்பினை மாணவர்களுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் நம் தேசத்தை பெருகிய முறையில் சிக்கலான சவால்களைக் கையாள்வதில் பன்முக அணுகுமுறையை கற்பித்தல் மூலம் எங்கள் மாணவர்களுக்கு உதவுவோம் என்று நம்புகிறோம்.

பி.ஏ. பொது கொள்கை திட்டம் பட்டப்படிப்பிற்கான விண்ணப்ப செயல்முறை பி.எஸ். அப்துர் ரஹ்மான் க்ரெசண்ட் இன்ஸ்டிட்யூட் ஆஃப் சைன்ஸ் அண்ட் டெக்னாலஜி கல்வி நிறுவனத்தில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

# ஜைசல்மரில் மூங்கில் சோலை திட்டம்: காதி கிராம தொழில் ஆணையம் மற்றும் எல்லை பாதுகாப்பு படை தொடக்கம்

புதுதில்லி, ஜூலை 29, 2021: பாலைவனமாவதை தடுக்கவும் மற்றும் ஊரக பொருளாதாரத்துக்கு உதவவும் ஜைசல்மரில் மூங்கில் சோலை திட்டத்தை காதி கிராம தொழில் ஆணையம் மற்றும் எல்லை பாதுகாப்பு படை நேற்று தொடங்கியது. ராஜஸ்தானின் பாலைவனப் பகுதியில் பசுமையை ஏற்படுத்தும் முதல் முயற்சியாக, காதி மற்றும் கிராமத் தொழில் ஆணையம், எல்லை பாதுகாப்பு படையினருடன் (பிஎஸ்எப்) இணைந்து ஜைசல்மரின் தனோத் கிராமத்தில் 1000 மூங்கில் கன்றுகளை நேற்று நட்டது. இந்த திட்டத்தை காதி கிராம தொழில் ஆணையத்தின் தலைவர், திரு வினய் குமார் சக்சேனா, பிஎஸ்எப்-ன் மேற்கு கட்டுப்பாட்டு மைய சிறப்பு தலைமை இயக்குனர் திரு சுரேந்திர பன்வார் முன்னிலையில் தொடங்கி வைத்தார். வறண்ட நிலத்தில் மூங்கில் சோலை அமைக்கும் (போல்ட்) திட்டம், நிலம் பாலைவனமாவதை குறைக்கும், உள்ளூர் மக்களுக்கு வாழ்வாதாரத்தையும் மற்றும் பலநோக்கு ஊரக தொழிலுக்கும் உதவியாக இருக்கும். இந்தியா-பாகிஸ்தான் எல்லையில் லாங்கேவாலா நிலைக்கு அருகே தனோத் மாதா கோயில் உள்ளது. இதன் அருகேயுள்ள 2.50 லட்சம் சதுர அடி கிராம பஞ்சாயத்து நிலத்தில் மூங்கில் கன்றுகள் நடப்பட்டன. தனோத் கிராமம் ஜைசல்மர் நகரில் இருந்து 120 கி.மீ தொலைவில் உள்ளது. இது ராஜஸ்தானில் முக்கிய சுற்றுலாத் தலமாக மாறியுள்ளது. சுற்றுலா பயணிகளை கவர, இங்கு மூங்கிலை வளர்த்து பசுமையை உருவாக்க காதி கிராம தொழில் ஆணையம் திட்டமிட்டுள்ளது. இந்த மூங்கில் கன்றுகளை வளர்க்கும் பொறுப்பு எல்லை பாதுகாப்பை படையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வறண்ட நிலைத்தில் மூங்கில் சோலை திட்டம், ராஜஸ்தானின் உதய்பூர் மாவட்டத்தில் உள்ள நிக்லா மண்ட்வா கிராமத்தில் கடந்த 4ம் தேதி தொடங்கப்பட்டது. அப்போது 25 பிகா நிலத்தில் 5000 சிறப்பு வகை மூங்கில் கன்றுகள் நடப்பட்டன. நாட்டில் நிலம் தரிசாவதையும், பாலைவனமாவதையும் தடுக்க பிரதமர் திரு நரேந்திர மோடி அழைப்பு விடுத்தார்.

அதன்படி விடுதலையின் அம்ரித் மகோத்சவத்தை கொண்டாட, காதி மூங்கில் திருவிழாவை காதி கிராம தொழில் ஆணையம் தொடங்கியுள்ளது.

# 2022-ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் சந்திரயான்-3 விண்ணில் ஏவப்படக்கூடும் : மத்திய அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங்

புதுதில்லி, ஜூலை 29, 2021: இயல்பான பணிகள் இனி மேற்கொள்ளப்படும் என்ற அனுமானத்தில், 2022-ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் சந்திரயான்-3 விண்ணில் ஏவப்படக்கூடும் என்று மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், புவி அறிவியல் துறைகளின் இணை அமைச்சரும் (தனிப்பொறுப்பு), பிரதமர் அலுவலகம், பணியாளர் நலன், பொதுமக்கள் குறைதீர்ப்பு மற்றும் ஓய்வூதியங்கள், அணுசக்தி மற்றும் விண்வெளி ஆகிய துறைகளின் இணை அமைச்சருமான டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தின் மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்துப்பூர்வமாக இன்று அவர் அளித்த பதிலில், சந்திரயான்-3 திட்டத்தை மெய்யாக்கும் பணி நடைபெற்று வருவதாகக் கூறினார்.

சந்திரயான்-3 திட்டத்தை மெய்யாக்குவதில் கட்டமைப்புப் பணியை இறுதி செய்தல், துணை அமைப்புமுறைகளின் நடைமுறையாக்கம், ஒருங்கிணைப்பு, விண்கல அளவில் விரிவான சோதனை மற்றும் பூமியின் மீது அமைப்புமுறை செயல்திறனை மதிப்பிடுவதற்கான சிறப்பு சோதனைகள் உள்ளிட்ட பல்வேறு செயல்முறைகள் அடங்கியுள்ளன. இந்தத் திட்டத்திற்கான பணிகள் கொவிட்-19 பெருந்தொற்றால் பாதிப்படைந்தது. எனினும், வீடுகளிலிருந்து செய்யக்கூடிய அனைத்துப் பணிகளும் பொதுமுடக்கத்தின் போதும் மேற்கொள்ளப்பட்டன. தளர்வுகள் அறிவிக்கப்படத் தொடங்கியது முதல், சந்திரயான்-3 திட்டப் பணிகள் மீண்டும் தொடங்கியதுடன், முதிர்ச்சியான நிலையில் இந்தப் பணிகள் உள்ளன.

# பிரதமரின் நகர்ப்புற வீட்டு வசதி திட்டத்தின் கீழ், ஏழைகளுக்கு கடந்த 2 ஆண்டுகளில் 37.57 லட்சம் வீடுகள் கட்ட ஒப்புதல்: மாநிலங்களவையில் தகவல்

புதுதில்லி, ஜூலை 30, 2021: பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கு, பிரதமரின் நகர்ப்புற வீட்டு வசதி திட்டத்தின் கீழ் கடந்த 2 ஆண்டுகளில் 37.57 லட்சம் வீடுகள் கட்ட ஒப்புதல் அளிக்கப்பட்டதாக மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரத்துறை அமைச்சர் திரு கவுசல் கிஷோர் தெரிவித்தார். அவர் மாநிலங்களவையில் எழுத்துப்பூர்வமாக தாக்கல் செய்த பதிலில் கூறியதாவது: பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் உள்ளவர்களுக்கு, பிரதமரின் நகர்ப்புற வீட்டு வசதி திட்டத்தின் கீழ் கடந்த 2 ஆண்டுகளில், 37.57 லட்சம் வீடுகள் கட்ட ஒப்புதல் வழங்கப்பட்டன. இவற்றில் 28.99 லட்சம் வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. 18.50 லட்சம் வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டுவிட்டன. அதோடு பிரதமரின் நகர்ப்புற வீட்டு வசதி திட்டத்தில் வட்டி மானிய திட்டத்தின் கீழ், பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள 5.81 லட்சம் பயனாளிகள் வட்டி மானியம் பெற்றுள்ளனர். வடகிழக்கு மாநிலங்களில் 50 லட்சம் வீடுகள் நிறைவு: 2022ம் ஆண்டுக்குள், அனைவருக்கும் வீடுகள் என்ற அரசின் தொலைநோக்குப்படி, பிரதமரின் நகர்ப்புற வீட்டு வசதி திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக கடந்த 2015ம் ஆண்டு முதல் வடகிழக்கு மாநிலங்கள் உட்பட அனைத்து மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களுக்கு நிதி அளிக்கப்பட்டு வருகிறது. மாநிலங்கள் தெரிவித்த திட்டத்தின் அடிப்படையில் சுமார் 113 லட்சம் வீடுகள் கட்ட அனுமதி அளிக்கப்பட்டன. இவற்றில் 84.40 லட்சம் வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. 50 லட்சத்துக்கும் மேற்பட்ட வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டு பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஒப்புதல் அளிக்கப்பட்ட வீடுகளை கட்டி முடிக்க, மத்திய உதவியாக ரூ.1.82 லட்சம் கோடி ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இவற்றில் ரூ.1.06 லட்சம் கோடி மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்கள்/ மத்திய அரசின் முகமைகளுக்கு வழங்கப்பட்டன. புதிய நகரங்கள் உருவாக்க ரூ.8000 கோடி: மாநிலங்கள் புதிய நகரங்களை உருவாக்க, செயல்பாடு அடிப்படையில் 8 மாநிலங்களுக்கு ரூ. 8,000 கோடியை மத்திய அரசு பரிந்துரைத்துள்ளதாக 15வது நிதி ஆணைய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாநிலமும் ஒரு நகரத்தை ரூ.1000 கோடி செலவில் உருவாக்க முடியும். தற்போது 8 மாநிலங்கள் புதிய நகரங்களை ரூ.8,000 கோடியில் உருவாக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் 2,734 திட்டங்கள் நிறைவு: தேர்ந்தெடுக்கப்பட்ட 100 நகரங்களில் ஸ்மார்ட் சிட்டி திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த ஜூன் 30ம் தேதி வரை, இந்த நகரங்கள் 5,956 திட்டங்களை ரூ.1,79, 413 கோடிக்கு டெண்டர் விட்டுள்ளன. இவற்றில் 5,314 திட்டங்களை ரூ.1,49,029 கோடி மதிப்பில் மேற்கொள்வதற்கான உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றில் 2,734 திட்டங்கள் ரூ,46,769 கோடி மதிப்பில் நிறைவடைந்துள்ளன. ஸ்மார்ட் சிட்டி திட்டத்துக்காக மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களுக்கு மத்திய அரசு கடந்த ஜூன் மாதம் வரை ரூ.23,925 கோடி வழங்கியுள்ளது.

# விக்கிரவாண்டி பஸ் நிலையத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு ரேஷன்கார்டு வழங்க கோரி மனு கொடுக்கும் போராட்டம்



விக்கிரவாண்டி, ஜூலை 30 2021: மாற்றுத்திறனாளிகளுக்கு ரேஷன்கார்டு வழங்க கோரி மனு கொடுக்கும் போராட்டம் நடந்தது.

விக்கிரவாண்டி பஸ் நிலையத்தில் தமிழ்நாடு அனைத்து வகை மாற்றுத்திறனாளிகள் மற்றும் பாதுகாப்போர் உரிமைகளுக்கான சங்கம் சார்பில் மத்திய அரசின் திட்டப்படி மாற்றுத்திறனாளிகளுக்கு ரேஷன் கார்டு வழங்க கோரி, மனு கொடுக்கும் போராட்டத்திற்கு மாவட்ட துணை தலைவர் சுப்பராயன் தலைமை தாங்கினார். ஒன்றிய நிர்வாகிகள் அய்யனார், மும்மூர்த்தி, செல்வமணி, முருகதாஸ், மங்கை, ராமமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட செயலாளர் கிருஷ்ணமூர்த்தி கோரிக்கை மனு கொடுக்கும் போராட்டத்தினை துவக்கி வைத்து பேசினார். மாநில குழு ராதாகிருஷ்ணன், மாவட்ட தலைவர் முருகன், மாவட்ட பொருளாளர் உமா, மாவட்ட துணை செயலாளர் நடராஜன், துணை செயலாளர் ஜெயக்குமார் உட்பட ஒன்றியத்தை சேர்ந்த பல்வேறு கிராமங்களிலிருந்து மாற்றுத்திறனாளிகள் பங்கேற்றனர்.

விக்கிரவாண்டியில் தமிழ்நாடு அனைத்து வகை மாற்றுத்திறனாளிகள் சங்கம் சார்பில் கோரிக்கை மனு கொடுக்கும் போராட்டம் நடந்தது.

# ரயில்டெல்லின் வைஃபை வசதிகள் தெற்கு ரயில்வேயின் 542 நிலையங்கள் உட்பட நாடு முழுவதும் 6045 நிலையங்களில் வழங்கப்படுகின்றன

